சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 (lw–1) | | |
| பெயர் | சரவணன் | நாள் | 14.02.2024 |
| தந்தை பெயர் | | ஜாதி | |
| கிராமம் | கலைஞர் காலனி | தொழில் | |
| தாலுக்கா | மயிலாடுதுறை) | சமயம் | |
| | | வயது | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி ஆஜரில்லை. எதிரி ஆஜரின்மை காரணமாக எதிரி தரப்பு வழக்கறிஞர் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை டவுன் கலைஞர் காலனியில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையாகி இறந்து போன அஜீத்குமார் என் சித்தப்பா மகன். ஆஜர் 1 முதல் 10 எதிரிகளை தெரியும். 11ம் எதிரி சத்யாநாதன் இன்று ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. அவரை பார்த்தால் தெரியும். எங்கள் தெருவை சேர்ந்த கதிரவன்,த/பெ. தேவதாஸ் என்பவர் EBல் வேலை பார்க்கிறார். அவருக்கும் மயிலாடுதுறை கொத்ததெருவை சேர்நத கண்ணன் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது. மேற்படி கண்ணன் என்பவர் ஒரு பிரச்சனையில் கதிரவனை அரிவாளால் வெட்டினார். அதனால் கண்ணன் மற்றும் அவரின் கூட்டாளிகள் மீது கதிரவன் புகார் கொடுத்து கண்ணனும் அவரது கூட்டாளிகளும் சிறையில் இருந்தார்கள். கடந்த 2022ம் வருடம் ஒருநாள் பேர்லஸ் தியேட்டர் அருகே வெட்டிக்கொலை செய்துவிட்டார்கள். அந்த கொலை வழக்கில் கதிரவன் மற்றும் 21 நபர்கள்

மீது மயிலாடுதுறை போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள். அந்த 21 பேர்களில் கதிரவன் அஜித்குமாரும் உண்டு. கடந்த 2024 மார்ச் மாதம் 20 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நானும் என் நண்பர் அஜித்தும் என்னுடைய நாயை எடுத்து கொண்டு அந்த நாயை மேட்டிங்கிற்கு விட மாப்படுகை இரயில்வே கேட்டருகில் போனோம். மேட்டிங் முடித்து இரவு 8.45 மணியளவில் திருவழுந்தூர் பெருமாள்கோவில் வடக்கு வீதியில் Splender plus இருசக்கர வாகனத்தில் வந்தோம். வண்டியை அஜித் ஓட்டினார் நான் நாயை வைத்துக்கொண்டு பின்னால் உட்கார்ந்திருந்தேன். இரண்டு இருசக்கர வாகனம் வந்தது. அதில் ஒன்று வெள்ளைக்கலர் பல்சர் வாகனம் மற்றொன்று சிவப்பு கலர் அப்பாச்சி வாகனம். வெள்ளை நிற பல்சர் வாகனத்தில் இரண்டு நபர்கள் சந்திரமோகன் மற்றும் சந்திரமௌலி ஆகியோர் உட்கார்ந்து இருந்தனர். அவர்கள் எங்கள் வாகனத்தின் முன்பு வந்து எங்கள் வாகனத்தை இடித்தார்கள். வெள்ளை வாகனத்திற்கு பின்னால் வந்த சிவப்பு அப்பாச்சி வாகனத்தில் சதீஷ், ஸ்ரீராம் மற்றும் பாலாஜி ஆகியோர் வந்தார்கள். வெள்ளை கலர் பல்சர் வாகனம் எங்கள் வண்டி மீத மோதியதால் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். கீழே விழுந்த அஜித் எழுந்து நின்றான். அவன் எழுந்து நின்ற போது சந்திரமோகன் அரிவாளை எடுத்து பறக்குச்சிக்காரி மகனே என்று திட்டி என் அண்ணன் சாவுக்கு நீதான் காரணம் என்று சொல்லி அரிவாளால் முகத்திலேயே வெட்டினார். அதற்கு பிறகு மேலே குறிப்பிட்ட பிற எதிரிகள் அனைவரும் சேர்ந்து அஜித்தை மானாவாரியாக வெட்டினார்கள். அதை தடுக்க சென்ற என்னை மேற்சொன்ன ஐந்து எதிரிகளும் ( சதீஷ், பாலாஜி, ஸ்ரீராம், சந்திரமோகன், சந்திரமௌலி) இடது முன்னங்கையிலும் பின்னங்கை, முகம் வலது பக்க முதுகு ஆகிய இடங்களில் அரிவாளால் வெட்டினார்கள்.

S.தரவி

(சாட்சி தனது இடது முன்னங்கை மற்றும் பின்னங்கை இடது பக்க கன்னம், வலது பக்க முதுகு ஆகியவற்றை காட்டுகிறார் அங்கு காயத்தழும்பு காணப்படுகிறது) பக்கத்தில் நின்று கொண்டிருந்த நாகராஜ், சத்யசீலன் ஆகிய இருவரும் அவர்களிடமிருந்து அரிவாளை வாங்கி அஜித்தை வெட்டி தலையையே துண்டாக எடுத்து விட்டார்கள். அதன்பிறகு நான் மேற்கே பார்த்து ஓட ஆரம்பித்து விட்டேன். இவனை விட்டால் இவன் காட்டிக்கொடுத்து விடுவான் இவனையும் வெட்டுங்கடா பறக்குச்சிகாரி மகனே என்று திட்டினார்கள். என்னை மகாவிஷ்ணு, அஜித்குமார் ஆகியோர் எதிரே மறைத்தார்கள். மோகன்தாஸ் கிழக்கே இருந்து மறைத்தார். சுத்தி நான்கு புறமும் எதிரிகள் என்னை மறைத்தார்கள் நான் எதிரே இருந்த வீட்டிற்குள் போய் கதவை மூடும்போது சதீஷ் கதவை மூடி எனது வலது கை ஆட்காட்டி விரலை அரிவாளால் வெட்டிவிட்டார். (சாட்சி வெட்டுப்பட்ட ஆட்காட்டி விரலை காட்டுகிறார்) அதன்பிறகு தெருமக்கள் கூடி விட்டார்கள். அதன்பிறகு பொதுமக்கள் சேர்ந்து விரட்ட ஆரம்பித்தார்கள். எதிரிகள் ஐந்து வண்டிகளில் அங்கிருந்து தப்பிவிட்டார்கள். அதன்பிறகு அருகில் இருந்த இரண்டு சின்னப்பிள்ளைகள் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தது. நான் ஆம்புலன்ஸில் ஏறி மயிலாடுதுறை GH க்கு வந்தேன். அதன்பிறகு அஜித் உடலை ஆம்புலன்ஸில் எடுத்து வந்தார்கள். மயிலாடுதுறை GH ல் இடது முன்னங்கை நரம்பு கட்டாகி விட்டது என்று சொல்லி இங்கு பார்க்க முடியாது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு போங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு ஆம்புலன்ஸில் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு போனேன். அங்கு ஆப்பரேஷன் செய்தார்கள். ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். 21ம்

S. [illegible]

தேதி மயிலாடுதுறை இன்ஸ்பெக்டர் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வந்தார். நான் அவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது அது அசாஆ 1** ஆகும். அதிலுள்ள கைரேகை என்னுடையது. அதன்பிறகு ஒரு வாரம் கழித்து டிஸ்சார்ஜ் ஆனேன். 6ம் தேதி DSP வீட்டிற்கு வந்தார். அவர் என்னை விசாரித்தார். நான் நடந்த சம்பவத்தையும் எதிரி பெயரையும் சொன்னேன். மயக்கத்தில் இருந்ததால் புகார் வாக்குமூலத்தில் அனைத்து எதிரிகள் பெயரையும் சொல்லமுடியவில்லை. DSP விசாரணையில் எதிரிகள் பெயரை சொல்லியிருக்கிறேன். எனக்கு கையில் ஏற்பட்ட வெட்டுக்காயங்களால் எதை தொட்டாலும் உணர்வில்லை. அவ்வளவு தான்.

**8ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

8ம் எதிரியை தெரியும் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அஜித்குமாரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் அவரை பார்த்திருக்கிறேன். சம்பவத்தன்று தான் அவர் பெயர் தெரியும். 8ம் எதிரி அஜித்குமார் பெயரை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் சம்பவத்தின்போது எனக்கு அவர் பெயர் தெரியாது. பசங்க சொல்லிதான் தெரியும். என்னுடைய நண்பர்கள் (சரவணண், பிரகாஷ் ஆகியோர்) அஜித்குமார் போட்டோவை காட்டி இவன் சம்பவத்தின்போது இருந்தாரா என்று கேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னேன். அவன் பெயர் அஜித்குமார் என்று சொன்னார்கள். எப்போது போட்டோவை காட்டி கேட்டார்கள் என்றால் மூன்று நாட்கள் கழித்து கேட்டார்கள். மருத்துவமனையில் என்னை அனுமதித்தபோதும் புகார் வாக்குமூலம் கொடுத்த போதும் சம்பவத்தில்

S. சரவண்

ஈடுபட்டதாக சொல்லும் நபர்கள் அடையாளம் தெரிந்த நபர்கள் என்று சொன்னேனா அல்லது அடையாளம் தெரியாத நபர்கள் என்று சொன்னேனா என்றால் அடையாளம் தெரிந்த நபர்கள் என்று தான் சொன்னேன். புகார் வாக்குமூலத்தில் அஜித்குமார் எதிரே வந்து மறைத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். 06 ம் தேதி DSP என் வீட்டிற்கு வந்து விசாரித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 06.04.2024 அன்று அஜித்குமாரை இவ்வழக்கில் சட்டத்திற்கு புறம்பாக கைது செய்து வழக்கில் சேர்த்த பிறகு 25.04.2024 அன்று அஜித்குமாரை தொடர்பு படுத்தி இந்த வழக்கில் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும் அதற்கேற்ப போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக அஜித்குமாரை தொடர்பு படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் கொடுத்தபோதும் போலிசார் விசாரித்தபோதும் மயக்கத்தில் இருந்ததால் என்னால் பல எதிரிகளின் பெயரை கூறஇயலவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றாலும் மேற்படி சங்கதியை 6ம் தேதி என்னை DSP விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு கூறவில்லை என்றாலும் வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதன்முறையாக இந்த விளக்கத்தை முன் வைக்கிறேன் என்றால் சரியல்ல. என் நண்பர்கள் போட்டோ காட்டி இவன் சம்பவத்தில் இருந்தானா என்று கேட்டதாகவும் நான் ஆமாம் என்று சொன்னதாகவும் அவன் பெயர் அஜித்குமார் என்று சொன்னதாகவும் போலிசார் சொல்லிக்கொடுத்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

S.சரவ

25.04.2024 ற்க்கு முன்பு அஜித்குமாரை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அஜித்குமாரை முன்னிறுத்தி அவரை தெரியும் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**11 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து ஆங்கிலத்தில் போடுவேனா அல்லது தமிழில் போடுவேனா என்றால் தமிழில் தான் போடுவேன். புகாரை நான் கைப்பட எழுதினேனா அல்லது போலிசார் எழுதிய புகாரில் கையெழுத்து போட்டேனா என்றால் அப்போது எனக்கு கையில் கட்டு போடப்பட்டிருந்தது. அதனால் எழுத முடியாது. நான் சொன்னதை போலிசார் எழுதினார்கள். நான் கையெழுத்து போடவில்லை. கைரேகை தான் வைத்தேன். புகார் வாக்குமூலத்தில் என்னையும் அஜித்குமாரையும் வெட்டியது நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு குடிப்பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. மாதம் ஒரு முறை குடிப்பேன். சம்பவத்தன்று குடிக்கவில்லை. மருத்துவர் மருத்துவ சான்றில் போதை தலைக்கு ஏறியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் அன்று குடித்திருக்கவில்லை. மருத்துவர் ஆங்கிலத்தில் Alcohol influence என்று எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. நான் அன்று குடிக்கவில்லை. என்னை யார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் என் மனைவி, மாமியார் என் வீட்டில் உள்ளவர்கள் சேர்த்தார்கள். புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆனந்தராஜ் வீட்டிற்கு சென்றேன் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சரி. அதேபோல் போலிஸ் விசாரணையிலும் மறு வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால்

S. சரவ

ஆமாம் சொல்லியிருக்கிறேன். நான் போதை தலைக்கேறிய நிலையில் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சுவற்றிலோ, சாலை தடுப்பு மீதோ, மின்கம்பத்தின் மீதோ மோதிவிட்டு அதனால் ஏற்பட்ட காயத்தை இந்த வழக்கு சம்பவத்தில் தொடர்பு படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதுபோல் வண்டியை மோதவில்லை. அதனால் காயம் ஏற்படவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை. இறந்து போனவர் என் சித்தப்பா மகன் என்பதால் எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு மீண்டும் போலிசார் என்னை அழைத்து சென்று விசாரித்தார்களா என்றால் இல்லை. இறந்து போனவருக்கு அரசாங்கத்தில் இருந்து நஷ்டஈடு பெற்றுத்தர எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 5, 7 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 5, 7 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் இலவச வழக்கறிஞர் நியமனம் செய்ய மனுக்கொடுத்து திரு. திருமால் சுந்தரம் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டார் ஆனால் மேற்படி எதிரிகள் தங்கள் தரப்பில் வேறு வழக்கறிஞர் நியமனம் செய்யப்போவதாக சொல்லி அவர் வக்காலத்து தாக்கல் செய்யவேண்டாமென்று சொல்லிவிட்டதால் திருமால்சுந்தரம் வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை. மேற்படி எதிரிகள் தங்கள் வழக்கறிஞர் திரு. சந்தோஷ், MS. 3468/2019 என்பவர் தங்களுக்காக ஆஜராவதாக சொன்னார்கள். அவரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். ஆனால் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவும் தயாராக இல்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.

S. தாசன்

PW1



**6, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6, 9 எதிரிகள் தரப்பில் திரு. நடேச ஜெயராமன், வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்தார் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

14/2/2025

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

14/2/25